**2019 நவம்பர் மாதம் 21 ஆம் தேதி வியாழக்கிழமை**

***தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்***

| | | |
|---|---|---|
| ***எம்.சி.ஓ.பி.நெ.*** | : | ***790 / 2015*** |

*2019 – ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 – ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. **V.** சசிகலா கிரேடு 2 பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | RW 2, ஆதிகேசவலு |
| **தகப்பனார் பெயர்** | : | சுந்தர்ராஜீலு |
| **ஊர்** | : | மேலக்கல்கண்டாகோட்டை |
| **வட்டம்** | : | திருச்சி |
| **மாவட்டம்** | : | திருச்சி |
| **தொழில்** | : | ஓய்வு |
| **வயது** | : | 62 |

*தேதி: 21.11.2019.*

**முதல் விசாரணை: –**

நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். விபத்தில் சம்மந்தப்பட்ட எ எச் 3889 என்ற வாகனம் எனக்கு சொந்தமானதாகும். அதற்குண்டான பதிவுச்சான்றிதழும் என் பெயரில் தான் உள்ளது. அதன் நகல் **எ.சா.ஆ.4** ஆகும். அந்த வாகனத்தை காப்பீடு செய்ததன் பாலிசி காப்பி நகல் **எ.சா.ஆ.5** ஆகும். என் மகனின் ஒட்டுநர் உரிம நகல் **எ.சா.ஆ.6** ஆகும்.

**குறுக்கு விசாரணை: – ( மனுதாரர் தரப்பில் )**

நான் பழைய 10 – ம் வகுப்பு படித்துள்ளேன். இந்த விபத்தில் என் மகன் வாகனத்தை ஓட்டி சென்றார். அவருடைய நண்பர் ஒருவர் மட்டும் தான் பின் இருக்கையில் அமர்ந்து சென்றார். இரண்டு நபர்கள் பின் இருக்கையில் உட்கார்ந்து செல்லவில்லை. விபத்து சமயத்தில் என் மகனுக்கு பின் இருக்கையில் இரண்டு நபர்கள் அமர்ந்து சென்றார்கள் என்றும், வழக்கிற்காக அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த உடன் என் மகன் திருச்சி, ஏபிசி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். விபத்தில் காயம்பட்டஎன் மகன் ஐசியூ வார்டில்

அனுமதிக்கப்பட்டு பேச்சு இல்லாமல் ஒரு வருடம் மருத்துவமனையிலேயே தங்கி இருந்து, பின்னர் இறந்து விட்டார். விபத்தின் போது என் மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்த ஒருவருக்கு இன்சூரன்ஸ் தரப்பில் பணம் கொடுக்கப்பட்டு விட்டது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மனுதாரருக்கு இன்சூரன்ஸ் தரப்பில் இருந்து பணம் வழங்குவதற்கு எனக்கு ஆட்சேபனையும் இல்லை. மனுதாரர் எந்த ஊரிலும் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நஷ்டஈடு பெறுவதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. என் மகன் மருத்துவமனையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்திற்கு முழு காரணம் என் மகனின் கவனக்குறைவு தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:—( 2—ம் எதிர்மனுதாரர் தரப்பில் )**

மனுதாரர் பெயரில் தான் குற்ற வழக்கு உள்ளது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு மனுதாரர் தான் காரணம் என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை:— இல்லை.**

**ஒம்/—எஸ்.கிரி,**
**தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**